திருமலை தமிழ் அரச ஊழியர் வேலைக்கு திரும்ப பாதுகாப்பு, போக்குவரவு செய்ய கோரிக்கை

திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள அரச ஊழியர்கள் தமது நிலைமைகள் குறித்து யாழ் அரசாங்க அதிபர் ஊடாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளனர். இங்கு அடிக்கடி ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்படுவதாலும், போக்கு வரத்து சீரில்லாததாலும் பாதுகாப்பு நிலை பாதிப்படைந்ததாலும் தாம் மீண்டும் திருகோணமலைக்கு திரும்ப முடியாதிருப்பதாக இவ்வூழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நேற்று யாழ் கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் திருகோணமலையில் பணிபுரியும் கூட்டுறவு ஊழியர்களின் கூட்டம்நடைபெற்றபோது இவ்வாறு தெரிவித்து தமக்குப்போதிய பாதுகாப்பும் பிரயாண ஒழுங்குகளும் ஏற்படுத்தப்பட்டால் தாம் வேலைக்கு திரும்புவதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர். திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் போது தாம் பட்ட கஷ்டங்களையும் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா :-3-50

முரசொலி

முரசு 04 ஒலி 231 செவ்வாய் 02-10-1990 (புரட்டாதி 16) ற.அவ்வல் 12

யாழ் மாவட்டப் பாடசாலைகளை அடுத்த வாரம் திறக்க நடவடிக்கை

கோட்டங்களுக்கு சுற்று நிருபம் அனுப்பப்பட்டது

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் அனைத்தையும் அடுத்த வாரமளவில் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்ப கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ளன. கடந்த சரஸ்வதி பூசையின் போது யாழ் மாவட்ட பாடசாலைகளில் மாணவர்களும், ஆசிரியர்களும் அதிகமாக வந்திருந்தனர்.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தினால் சகல கோட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

பாடசாலைகளை மீண்டும் திறப்பது தொடர்பாக சகல உதவிக் கல்விப்பணிப்பாளர்களும் தத்தமது பிரிவிலுள்ள உதவி அரசாங்க அதிபர், கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவர்களுடன் தொடர்பு கொண்டு அதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல் — 04 ஆம் பக்கம் பார்க்க

மண்டைதீவில் கைதான 28 இளைஞர் நிலை மர்மம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை யன்று மண்கும்பான் அ. மி. த. க. பாடசாலையில் அகதிகளாக இருந்த 28 இளைஞர்களை அங்குவந்த இராணுவத்தினர் கைதுசெய்து கேடயமாகக் கொண்டு சென்றுள்ளனர். இந்த இளைஞர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

இவர்கள் மண்டைதீவு அல் — 4 ஆம் பக்கம் பார்க்க

நாளைய கூட்டம்

இலவச உணவுப் பங்கீடு தொடர்பாக தென்மராட்சிப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள், வட்ட அவைத் தலைவர், — 04 ஆம் பக்கம் பார்க்க

புங்குடுதீவு கடற் பகுதியில் இளைஞர் சடலம் கரை ஒதுங்கியது

புங்குடுதீவு மேற்கு வீரம் புளியடி பகுதியில் உள்ள கடற்கரையில் நேற்று முன்தினம் காலை எட்டு மணியளவில் இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது.

சுமார் 20 வயது மதிக்கத் தக்க இவ் இளைஞரின் சடலத்தின் கைகளும், கால்களும் துண்டாடப்பட்டும், மண்டை —04ஆம் பக்கம் பார்க்க

ஷெல் தாக்குதல் இருவர் காயம்

காங்கேசன்துறை விகாரையில் உள்ள இராணுவத்தினர் நேற்று பகல் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பிலிப்ராசா 20) வி. சாந்தன் (23) ஆகியோர் இதனால் காயமடைந்து யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ப- 11-ரூ

யாழ். தபாலகம் வியாழன் முதல் மடத்தடியில் இயங்கும்

யாழ் இந்துமகளிர் கல்லூரியில் தற்காலிமாக இயங்கும். யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் மீண்டும் பிரதான வீதியிலுள்ள மாக்பெட் கட்டிடத்தில் எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் இயங்கவிருப்பதாகப் பிரதம தபாலதிபர் சு. பரராசசிங்கம் தெரிவித்தார்.

தற்பொழுது ஊரடங்குச் —04ஆம் பக்கம் பார்க்க

புகையிரத ஊழியருக்கு

யாழ் மாவட்ட சகல புகையிரத ஊழியர்களின் சம்பளம் சம்பந்தமாக கலந்து ஆலோசனை செய்வதற்காக சகலரும் யாழ் புகையிரத நிலையத்திற்கு 4-ம் திகதி வியாழன் காலை 8.30 மணிக்கு சமுகந்தருமாறு யாழ் பிரதம புகையிரத நிலைய அதிபர் அறிவித்துள்ளார். (71)

இரத்தவங்கியில் இரத்தம் இல்லை

மானிப்பாய்யில் இயங்கும் யாழ்போதனாவைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் எந்த வகையைச் சேர்ந்த இரத்தமும் இல்லையென இரத்த வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

இவ் இக்கட்டான சூழ் நிலையை உணர்ந்து பொது —04ஆம் பக்கம் பார்க்க

தொடரும் மிதிவெடி விபத்து; பரந்தனில் மக்கள் அச்சம்

பரந்தன் இராணுவம் முகாமை விட்டு வெளியேறி ஒரு மாதகாலத்தின் பின்னர் இராணுவ முகாமுக்கு அருகில் இருந்த தமது சொந்த வீட்டுக்கு சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது வலது காலைஇழந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை — 4 ஆம் பக்கம் பார்க்க

வீரமரணம்

நேற்று ஊர்காவற்றுறையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையே மோதல் இடம் பெற்றுள்ளது.

இம்மோதலில் இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் சரத் பாபு(சுந்தரலிங்கம் - சுந்தர — 4 ஆம் பக்கம் பார்க்கந்

"இந்த யுத்தமும் அரசாங்கமும் சிங்களத் தொடர்புசாதனங்களும்"

மன்னிக்கவும் இன்று இல்லை நாளை தொடரும்!

"உணர்ச்சியுடைய எந்த உயிரினமும் போர்க்குணம் உடையதாகவே இருக்கும். ஆனால் உணர்ச்சியை அடக்கி அன்பும் அருளும் பெற்று வாழ விரும்புவது மனித இனம் ஒன்றே. இருப்பினும் உரிமை பறி போகும் போதும், மானத்திற்கு இழிவு நேரும்போதும், தற்காப்புக்குச் சோதனை நிகழும் போதும், போரிடுவதைத் தவிர வேறு வழியே இல்லை"

புரட்டுங்கள் - பக்கம் : 3

வாசியுங்கள்-

'மாருதி'யின்

'வீரம் செறிந்த தமிழர் வாழ்வு'

வவுனியாவில் மோதல்

வவுனியா மாவட்டத்திலுள்ள குருமன் காட்டு இராணுவ முகாமில் இருந்து 100 யார் தூரத்தில் இராணுவத்தினர் 3 பவல் கவச வாகனத்தில் நேற்று முன்தினம் வெளியேறியபோது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

காலை 6 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை இடம் பெற்ற இம் மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இராணுவம் பலத்த சேதத்துடன் முகாம் திரும்பியது. சேத விபரம் தெரியவில்லை.

காலபோகச் செய்கைக்கு விதைநெல் தட்டுப்பாடு

யாழ் மாவட்டத்தில் காலபோகத்திற்கு விதை நெல்லுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. நெல் விதைப்பு ஆரம்பமாகும் இக்கால கட்டத்தில் குறுகிய காலத்தில் நல்ல விளைச்சலைத் தரவல்ல விலைநெல் இனங்களான பி. ஜி. 34-6, மற்றும் 500-1 ஆகியனவற்றைப் பெறமுடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

கடந்த காலங்கள் இந்த விதை நெல் ரகங்கள் கமநலச் சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத் தக்கது, (13ரூ)

பென்சன் வவுச்சர்கள்

ஓய்வூதியம் பெறுவோருக்கான ஆகஸ்ட் மாதத்திற்குரிய சகல வவுச்சர்களும் யாழ் ஓய்வூதியக் கிளையினால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஓய்வூதியம் பெறுவோர் யாழ் செயலகத்திற்கு அலைந்து திரிய ...04ஆம் பக்கம் பார்க்க

விங்கோ றேடர் கப்பல் நேற்றுப் பருத்தித்துறை வந்தது

நேற்று மாலை 3 மணியளவில் விங்கோ றேடர் என்ற கப்பல் பருத்தித்துறைக்கு வந்தது.

இதில் 118 தபால் பொதிகளும், ஆஸ்பத்திரிக்கான குறைவான மருந்துகளும், 1700 மெற்றிக் தொன் உணவுப்பொருட்களும் கொண்டு வரப்பட்டுள்ளன.

தொண்டர் நிறுவனங்களுக்கான அத்தியாவசியப்பொருட்களும் சில அரச அலுவலகங்களுக்குரிய பணமும் வந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. ப 11 ரூ

கோட்டையில் ஆயுதங்கள்

யாழ் கோட்டை இராணுவ முகாமில்கண்ணிவெடி,பொறிவெடிகளை அகற்றும் பணியில் விடுதலைப் புலிகள் தொடர்து ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மேலும் பல இராணுவத்தினரின் பொருட்களை மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட பொருட்களின் ...04ஆம் பக்கம் பார்க்க

சித்ராலயா

போட்டோஸ்ரட்

சித்ராலயா நிறுவனம் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை - தற்பொழுது

351, கோவில் வீதி, நல்லூர்

(கம்பன் கோட்டம் முன்பாக)
என்ற முகவரியில்
காலை 9 தொடக்கம் நண்பகல் 12 வரை
செய்து தருகிறார்கள்.

10014

மில்க்வைற் சலவைப் பவுடர்



வெற்றுப் பைக்கற் 25 அனுப்பிப் ''படிப்பினை'' வெளியீடும், மகாத்மாகாந்தி ஸ்ரிக்கரும் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்

10003

31-ம் நாள் நினைவஞ்சலி



செ. மார்க்கண்டு
(தவிட்டுக்கடை உரிமையாளர்)

தோற்றம்	மறைவு
7. 10. 1934	03. 09. 1990

3. 10. 1990 அன்று நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

கந்தசுவாமி கோவிலடி
கோப்பாய் வடக்கு.

மனைவி, பிள்ளைகள்,
தாய், மருமகன்.

10012

4-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்	விண்ணில்
30. 05. 1921	02. 10. 1986

திருமதி
மரியரத்தினம் குணரத்தினம்

உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டு அகலா உங்கள் ஆத்ம இளைப்பாற்றிற்காக இடைவிடாது பிரார்த்திக்கின்றோம்.

'நவஜோதி'
புகையிரத ஒழுங்கை
சாவகச்சேரி.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

10010

ஈராக் படையில் இலங்கையர்;
கொழும்பில் பலர் முண்டியடிப்பு

ஈராக் படையில் சேர்ந்து போராடுவதற்கு இலங்கையர்கள் பலர் முன்வந்துள்ளனர். இத் தகவலை கொழும்பிலுள்ள ஈராக் தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா தாக்குதல் தொடுக்கும் பட்சத்தில் அதனை முறியடிக்க ஈராக் இராணுவத்தில் பங்களிப்புச் செய்ய இவர்கள் தயாராக உள்ளனராம்.

இத்தகையோர் தமது பெயர்களை கொழும்பிலுள்ள ஈராக் தூதுவராலயத்தில் பதிந்துள்ளனர். பெயர்களைப் பதிய பலர் தினமும் ஈராக் தூதுவராலயத்திற்கு செல்வதாகவும் இதுபற்றி ஈராக்தூதுவராலய உயரதிகாரி ஒருவர் மேலும் தகவல் தருகையில் ஈராக் படையில் இந்த இலங்கையர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களெனவும் கூலிப் பட்டாள நிலையில் இவர்கள் கணிக்கப்படுவார்களெனவும் இவர்களுக்கு இதற்கென கணிசமானாவு சம்பளம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். (கி)

கடந்த மூன்றுமாத மும்முனைத் தாக்குதல்களினால்

யாழ்நகரில் நூற்றுக்கணக்கில் கடைகள் சேதம்;
வீதிகள் எங்கும் கட்டிட சிதறல்கள்

மும்முனைத் தாக்குதலினால் யாழ் நகரில் உள்ள கடைகள், தியேட்டர்கள் என்பன பாரிய சேதமுற்றுள்ளதை தற்போது காணக் கூடியதாகவுள்ளது.

ஆரியகுளத்திற்கு முன் உள்ள தனியார் உயர்கல்விப் படிப்பகம் முற்றாக உடைந்த நிலையிலுள்ளது.

வெலிங்டன் தியேட்டர் பாரிய சேதத்திற்குள்ளாகி உள்ளது. திரையும் முன்புற மும் தரைமட்டமாகி உள்ளது. மேற்கூரையும் சுருண்ட நிலையிலுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

லிடோ தியேட்டர், வின்சர் தியேட்டர் என்பனவும் பாரிய சேதத்திற்குள்ளாகி உள்ளன. பாரிய குண்டு விழுந்து திரையரங்கும், படம் காட்டும் பகுதியும் சேதத்திற்குள்ளாகி உள்ளது. வின்சர் தியேட்டரின் முன்னுள்ள நகைக் கடைகளும் சேதமுற்றுள்ளன.

வின்சர் தியேட்டர் முன்பாக உள்ள இரு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உடைந்து காணப்படுகின்றன.

நாவலர் இந்து மகாவித்தியாலயமும் ஆட்லறி ஷெல்லினால் சேதமாகியுள்ளன. இதன் அதிர்ச்சி காரணமாக அருகிலுள்ள இந்து ஆலயமும், மனோகரா தியேட்டரும் சிறிது சேதமுற்றுள்ளன.

கே கே எஸ் வீதியிலுள்ள சண்முகநாதன் அச்சகத்தின் ஒரு பகுதி உடைந்து விழுந்துள்ளது அருகிலுள்ள வீடும் உடைந்துள்ளது. சோதிட நிலையமும் முற்றாக வீதியின் இருபுறமுமுள்ள நகைக்கடைகளும் சேதமுற்றுள்ளன.

கே. கே. எஸ். வீதியும், சிவன் வடக்கு வீதியும் சந்திக்கும் இடத்திலுள்ள மரத் தளபாட விற்பனை நிலையக் கூரை ஆட்லறி ஷெல் காரணமாக உடைந்துள்ளது. இதே வீதியிலுள்ள சைமன் கராஜ் பொம்மர் குண்டு வீச்சுக் காரணமாக தரைமட்டமாகி உள்ளது. றோட்டின் மத்தியில் குண்டுகள் விழுந்து உடைந்த நிலையில் உள்ளன.

நகரில் கே கே.எஸ் வீதியும், ஸ்ரான்லி வீதியும் சந்திக்கும் சந்தியில் மேற்குப் புறமாக உள்ள பல கடைகள் தரை மட்டமாகி உள்ளன. அத்துடன் பிள்ளையார் ஸ்ரோர் அருகிலுள்ள கடையும் தரை மட்டமாகி உள்ளது. மானிப்பாய் றோட்டிலுள்ள சேது சைக்கிள் கடை, சைக்கிள் திருத்தும் கடை ஆகியவையும் சேதமுற்றுள்ளன

கே கே. எஸ் வீதியில் பல நகைக்கடைகளும், படம் பிரேம்போடும் கடைகளும் உடைந்த நிலையிலுள்ளன. பாரதி பாஷா பாடசாலையும் அதன் அருகிலுள்ள கோயிலும் சேதமுற்றுள்ளன.

லிங்கநாதன் பிடவைக் கடை, சவரிமுத்து ஸ்ரோர்ஸ் கிழக்குப் புறமுள்ள கைலாசபதி மருந்துக்கடை, அம்பிகாபதி கடை உட்பட இப்பகுதியில் பல கட்டிடங்கள் சேதமுற்றுள்ளன.

சத்திரச் சந்தியிலுள்ள வி. எம் பி பலசரக்கு மாளிகை, சின்னத்துரை அன்பிரதர், கிருஷ்ண பவான் உட்பட பல கடைகள் பாரிய சேதமடைந்துள்ளன.

வாழைப் பழக் கடையும் அதனைச் சுற்றியுள்ள ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலைய வீதிக்கடைகளும் தரை மட்டமாகி உள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. இப்பகுதியில் ஒரு சில கடைகளே தப்பி உள்ளன. (ப-17-கி)

குருத்துவ வெள்ளி விழா

மாதகல் பங்குத் தந்தை அருட்திரு. ரெஜி ராஜேஸ்வரன் அடிகளாரின் 25-வது ஆண்டு குருத்துவ ஆண்டு நிறைவை ஒட்டி நாளை 3-ம் திகதி காலை 7 மணிக்கு மாதகல் பங்கு மக்கள் அவருக்குப் பாராட்டு விழா வொன்றை மாதகல் புனித தோமையர் ஆலயத்தில் நடாத்தவுள்ளனர். (ப-20 கி

நேற்று முதல்...

நேற்று முதல் மானிப்பாய் இலங்கை வங்கி மீண்டும் தனது வழமையான சேவையினை ஆரம்பித்துள்ளது.

எனினும் வங்கிப் பணப் புழக்கச் சுற்றோட்டம் குறைவாகவுள்ளதால் வங்கி முழுமையாக இயங்க முடியாமல் உள்ளதென வங்கி முகாமையாளர் தெரிவித்தார். (ப-11 கி)

காணவில்லை

கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த யோகராணி யேசுதாசன் (29) என்பவர் கடந்த ஆகஸ்ட் மாதம் 27-ம் திகதியிலிருந்து காணாமல் போய்விட்டார். அவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து அவரின் தாயார் திருமதி முத்துப்பிள்ளைக்கு அறியத்தரவும்.

15/1, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்

10009

போக்குவரத்துச் சபை அலுவலர்
8-ம் திகதி முதல் கடமைக்கு செல்ல பணிப்பு

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் சகல சாலைகளையும், அலுவலகங்களையுய் சேர்ந்த பாதுகாப்புக் காவலர்களும், ஏனைய உத்தியோகத்தர்களும் (கூலிநிருணயச் சம்பளச் சபை சாராத ஊழியர்கள்) 8-ம் திகதி திங்கட்கிழமை காலை 8. 30 மணிக்கு அவரவர் வேலைத் தளங்களுக்குக் கடமைக்குச் செல்லுமாறு வ. பி. போ. சபையின் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு உரிய சாலை முகாமையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும், குறித்ததிகதி முதல் கடமைக்குச் சமுகமளிக்காவிடின் அத்தினத்திலிருந்து சம்பளமற்ற விடுமுறையில் அவர்கள் வைக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்படுகிறது. (கி)

ஹெலித் தாக்குதல் தொடர்கிறது

வல்லை மண்டான் பகுதிகளில் நேற்றுமுன்தினம் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நண்பகல் 12. 30 மணியளவில் மேற்படி தாக்குதல் நடைபெற்றது.

இத் தாக்குதலின் போது வல்லை வெளியூடாகப் பிரயாணம் செய்த பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதே வேளை இயக்கச்சிப் பகுதியிலும் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (39கி)

மூன்று பேஸ் ஜெனறேற்றர்
(15 K. V. A)

பனை அபிவிருத்திச் சபைக்கு மூன்று பேஸ் (3 Phase) ஜெனறேற்றர் 15 K. V. A க்கு மேற்பட்டது தேவைப்படுகின்றது. குறித்த ஜெனறேற்றரை வைத்திருப்பவர்கள் அதன் விலை விபரங்களுடன் சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியில் அமைந்திருக்கும் பனை அபிவிருத்திச் சபையின் காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பொது முகாமையாளர்

10015

முரசொலி

எமது சிந்தனை

1990 - 10 - 02 செவ்வாய்

"காந்தி எமக்கு விடுதலை பெற்றுத் தந்தார். புழுதியில் கிடந்த நம்மை மனிதராக்கினார். எமக்கு ஒரு தனித்துவத்தைக் கொடுத்தார். எமக்கு ஒரு பெயரையும் தந்தார்!." — டி. எப். கரக

காந்தி வழி

காந்திமகான் கோட்சேயின் துப்பாக்கிக்குப் பலியான சமயம், நாட்டு மக்களுக்குச் செய்தியை அறிவிக்க வேண்டி இருந்தது. அதிர்ச்சியிலிருந்து மீளாத நிலையில் ஜவஹர்லால் நேருவை அகில இந்திய வானொலி நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

கையில் பேச்சுப்பிரதி ஏதும் இல்லை. துக்கம் தொண்டையை அடைக்க நேரு தொடங்கினார்: "The light has gone out..." (ஒளி அணைந்து விட்டது) இரண்டொரு நிமிஷங்களில் தம்மைச் சுதாரித்துக் கொண்டார்; "ஒளி அணைந்து விட்டது என்றா சொன்னேன்? இல்லை. இந்த நாட்டில் வீசிய ஒளி சாதாரண ஒளி அன்று. அது அணையாது. அது இன்னும் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து நமக்கெல்லாம் வழி காட்டிக் கொண்டிருக்கும்!"

காந்தி நூற்றாண்டின்போது ஒரு மேனாட்டறிஞர் சொன்னார்: "இந்த நூற்றாண்டு மட்டுமல்ல; இனி வரும் நூற்றாண்டுகளும் காந்தியின் நூற்றாண்டுகளாய் இருக்கும்!"

'மகாத்மா' என்ற அடைமொழிக்கு அருகதை உடையவராக, ஒரு யுக புருஷராகக் காந்தி உயர்ந்தது எவ்வாறு?

சத்தியத்தின்மீது தளராத பற்று சத்தியமே தெய்வம் என்று கொண்டாடும் கொள்கை. அவருடைய சுயசரிதை 'சத்திய சோதனை' ஆயிற்று அவர் தம் முடைய குறைபாடுகளையெல்லாம் மனந்திறந்து பேசினார், எழுதினார், 'நான் இமாலயத் தவறு செய்து விட்டேன்!' என அடிக்கடி சொல்லிக் கொண்டார். மக்கள் சேவைக்குத் தகுதி உடையவர் தாமா எனத் தம்மைத் தாமே உணர்த்திப் பார்த்துக் கொண்டார்.

அநீதியை எதிர்ப்பதில் காந்திக்கு இருந்த உறுதி பிரமிப்பூட்டுவது இன்றுகூட தென்ஆபிரிக்காவில் நிற வெறி ஒழிவதாய் இல்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அது எவ்வளவு குரூரமாக இருந்திருக்கும்! அந்தக்கடுமையை காந்தி தனிமனிதராக எதிர்த்தார்— விளைவுகளை ஏற்றுக்கொண்டார்.

உண்மையில் தென்ஆபிரிக்காவில் பெற்ற அனுபவத்தோடுதான் காந்தி இந்திய விடுதலைப் போரைத் தொடுத்தார். சாத்வீக எதிர்ப்பு அல்லது ஒத்துழையாமை என்ற தத்துவத்தை முன்வைத்தார். அது யாரும் கையாளாத ஆயுதமாக இருந்தது. 'சூரியனே அஸ்தமிக்காத' பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கலங்க அடித்தார்.

போராடுவது, ஆனால் எதிரிக்குத் துன்பஞ் செய்யாமல் இருப்பது— இது காந்திமகான் போதித்த அஹிம்சை ஆங்கிலப் பேரரசை எதிர்த்த அவரால் தனிப்பட்ட ஆங்கிலேயர்களோடு நட்புப் பூணவும்-பேணவும்- முடிந்தது.

காந்தியை ஒரு சிறுக்கர் என்று கருதியவர்களும் இருந்தார்கள், அவர் அடிக்கடி கடவுள் பற்றியும் நோன்பு பற்றியும் அந்த ராத்மா பற்றியும் மனசாட்சி பற்றியும் பேசியது சராசரி அரசியல் வாதிகளுக்கு ஒத்துவரவில்லை. நேருவின் வார்த்தைகளில் சொல்வதாயிருந்தால் "மண்டபங்களில் இருந்து கொண்டு சோசலிசம் பேசும் இவர்களைவிட காந்தி இந்தியாவின் மக்களை நன்கு அறிந்திருந்தார் அவரே இந்தியாவாக இருந்தார்"

ஆம், துன்பப்பட்ட மக்களோடு, தாழ்த்தப்பட்ட மக்களோடு தம் வாழ்வைப் பிணைத்துக் கொண்டவர் அவர். ஏழை இந்தியன் அணியக் கூடிய நாலு முழத்தைத் தன் உடையாக ஏற்றுக்கொண்டு லண்டன் வரை போன மகான் அவர்.

தியாகத் தீயால் புடமிடப்பட்டவர் காந்தி, எந்த விடுதலைக்காகக் காலமெல்லாம் போராடினாரோ. எந்த விடுதலைக்காக பலமுறை சிறையிருந்தாரோ, எந்த விடுதலைக்காக உண்ணா நோன்பு மேற் கொண்டாரோ, அந்த விடுதலை வந்த வேளையில் மகாத்மா அந்தக் கொண்டாட்டத்தில் இல்லை: வைபவத்தில் இல்லை; தலைநகரில் கூட இல்லை! ஹிந்துக்களின் சீற்றத்துக்கு ஆளான முஸ்லிம்களுக்கு ஆறுதல் தர கலவரம் நடந்த நவகாளி போயிருந்தார்!

ஆம், உண்மையான - தன்னலமற்ற - தியாகம் எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராது.

காந்தி அரசியலுக்கு வந்தது தற்செயலாய் இருக்கலாம். ஆனால் அவர் வருகை அரசியலைப் புனிதப் படுத்தியது.

காந்தீயத்துக்கு இடமில்லாததென்று கருதப்பட்ட தோர் உலகத்தில், மார்ட்டின் லூதர் கிங் காந்தி வழியில் போராட்டம் நடத்தியதைக் கண்டோம்.

ஆம், காந்தி இனிவரும் தலைமுறைகள் மீதும் தம் செல்வாக்கைப் பிரயோகிக்கவே செய்வார்!

செஞ்சிலுவை உறுப்பினர் வீடும் தப்பவில்லை

கடந்த வியாழக்கிழமை நிகழ்ந்த குண்டுவீச்சுத் தாக்குதலில் யாழ். செஞ்சிலுவைச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் நா. மகாலிங்கத்தின் வீடு சேதமடைந்துள்ளது. இவரது வீடு யாழ் கோவில் வீதியில் அமைந்துள்ளது.

தாக்குதல் நிகழ்ந்த வேளை திரு. மகாலிங்கம் மயிரிழையில் உயிர் தப்பினார். இத் தாக்குதலின்போது அதே இடத்தில் பி. சக்திவேல் என்பவரின் வீடு முற்றாகச் சேதமடைந்தது. (கி)

பிறப்புப் பதிவு நடைபெறும்

யூன் மாதம் 11-ம் திகதிக்குப் பின்னர் யாழ் போதனா வைத்திய சாலையில் பிறந்த குழந்தைகளின் பிறப்புப்பதிவு வேலைகள் தற்சமயம் "சிவசக்தி வைத்திய நிலையம்", 327, கண்டி வீதி, புங்கன்குளம் என்ற விலாசத்தில் நடைபெற்று வருகின்றது.

தற்சமயம் மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்திய சாலையில் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புப் பதிவுகளையும் இங்கு பதிவு செய்யலாமென தெரிவிக்கப் படுகிறது.

பதிந்து இரு கிழமைகளில் இலவசமாக வழங்கப்படும் பிரதியை நேரில் சென்று பெற்றுக்கொள்ள முடியும். (ப-1 கி)

ஒப்படைகள் வந்தன

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய மட்டம் — 1 எம். ஏ. எப். கணிதம் முகாமைத்துவம் எம், சி. எப். எம். சி. டி. துறை மாணவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்படைகள் திருத்தப்பட்டு இங்கு வந்துசேர்ந்துள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் தமது மாணவர் பதிவுப் புத்தகத்துடன் புதன் அல்லது வெள்ளிக்கிழமைகளில் காலையில் யாழ். பிராந்திய நிலையத்திற்குச்சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகின்றது. (ப—7 கி)

விவசாய அலுவலகம் இடமாற்றம்

கிளிநொச்சி உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்க) அலுவலகம் வட்டக்கச்சி விவசாயப் பண்ணைக்கு மாற்றப்பட்டுள்ளது. சகல வெளிக்கள விவசாயப் போதனாசிரியர்களும் வரும் 10 -ம் திகதி காலை வட்டக்கச்சி விவசாயப் பண்ணைக்கு சமுகம் கொடுக்கும்படி க. ப. பத்மநாதன், விவசாய உத்தியோகஸ்தர் (வலையம் - 2) கோருகிறார். (ஸ்ரீ)

சங்கக் கடைகள் மீண்டும் திறப்பு

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோ. கூ. சங்க கிளைகள் மீண்டும் இவ்வாரம் முதல் திறக்கப்படவுள்ளன.

அண்மையில் கிளிநொச்சியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம் பெயர்ந்ததினால் சங்கக் கிளைகள் மூடப்பட்டிருந்தன.

மக்கள் மீண்டும் தற்போது தமது பகுதிகளுக்கு திரும்பி வருவதால் அக்கிளைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை யெடுக்கப்பட்டுள்ளது. (ப-6கி)

நெல்லியடி வழமைக்கு

நெல்லியடிப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் தற்போது மீண்டும் திறக்கப்பட்டு வருகின்றன.

தட்டுப்பாடான பல பொருட்களை நெல்லிபடிச் சந்தையிலும், வர்த்தக நிலையங்களிலும் தற்போது பெறக் கூடியதாகவுள்ளது. (33கி)

வீரம் செறிந்த தமிழர் வாழ்வு

— 'மாருதி'

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்று கூறுகிறது திருக்குறள்.

மனிதன் இவ்வுலகில் தோன்றி வாழ்ந்தால் அவன் புகழ் பெற்று நிற்க வேண்டுமாம். இல்லையென்றால் அவன் பிறக்க வேண்டிய அவசியமே இல்லை என்பது இக்குறளின் கருத்து.

இதை உணர்ந்தே அக்காலத் தமிழர்கள் புகழ் வேண்டினர். புகழுக்கு வித்தாக வீரத்தையே பெரிதென்று நம்பினர். ஆம். பண்டைய தமிழ் இலக்கியம் ஒவ்வொன்றையும் நோக்கினால் இந்த உண்மை நன்கு புலப்படும்.

காதலும் வீரமும்

தமிழ் இலக்கியத்தில் இரண்டு செய்திகள் சிறப்பான இடம் பெறுகின்றன. ஒன்று காதல்; மற்றையது வீரம். காதலை அகத்திணை இலக்கியங்கள் பாடுகின்றன என்றால் வீரத்தை புறத்திணை இலக்கியங்கள் வெகு சிறப்பாக எடுத்தியம்புகின்றன. பழந்தமிழருக்கு காதல் உணர்வுகள் இருந்தன. ஆனால் அது வீரத்திற்கு அடுத்தபடியாகத்தான் உணரப்பட்டது. அவர்கள் வீரத்திற்கே முதலிடம் தந்தார்கள். ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு வீரனையே காதல் கண்ணோடு நோக்கினாள். பழந்தமிழ் வீரர்களையும் அவர்கள் ஆற்றிய வீரச் செயல்களையும் விளக்கிக்காட்ட புறப்பொருள் வெண்பா மாலை என்றொரு இலக்கிய நூலே இருக்கின்றது என்றால் தமிழர்களின் வீரத்தை என்னென்பது! அதுமட்டுமா தமிழக மன்னர்களின் வீர வரலாறுகளை புறநானூறு அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. வீர மறவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதமுற்றனர். தம் கால்களில் வீரக் கழல்களைத் தவறாது அணிந்திருந்தனர்.

பழந்தமிழ் மக்கள் வாழ்க்கையோடு வீரமும் வீர உணர்ச்சியும் எவ்வாறு பின்னிப்பிணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இலக்கியங்களிலிருந்து பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன. அக்கால மக்கள் குழந்தை இறந்து பிறந்தாலும் அல்லது பிறந்து இறந்தாலும் அல்லது சதைப்பிண்டமாகப் பிறந்திருந்தாலும் அவற்றை அவ்வாறே அடக்கம் செய்யாமல் வாளினால் வெட்டி அடக்கம் செய்தனர்.

இதனைப் புறநானூறு,

"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆள் அன்று என்று வாளின் தப்பார்"

என்று குறிப்பிடுகிறது. அதாவது அக்குழந்தை வளர்ந்து வீரனாகி நாட்டுக்காகப் போராடி மடியாததை அவர்கள் பெரும் குற்றமாகவும், இழுக்காகவும் கருதினர். வீரப் புகழோடு இறந்தால்தான் அவனுக்கு மேலுலகத்தில் நல்லின்பம் கிடைக்கும் என்பது அவாகளது நம்பிக்கையாகும்.

அதுமட்டுமா? நோயால் இறந்தவர்களைப் போர்க்களத்தில் இறவாத குற்றம் நீங்க புற்தரையில் கிடத்தி "வீரமே துணையாக போர்க்களத்தில் இறந்தோர் செல்லுமிடம் செல்க!" என்று சொல்லி வாளால் வெட்டிப் புதைத்தனராம்

போர் புதியது அன்று

அக் காலத்தில் நாடுகளுக்கிடையே கடும் போர்கள் நிகழ்ந்தன. வீரர்கள் தம் வீரத்தை போர்க்களத்தில் காட்டினர். போரில் ஈடுபடுவது தமிழனுக்கோர் புதிய நிகழ்ச்சியல்ல. அது தொன்று தொட்டு நிகழ்ந்து வருவது.

"ஒருவனை ஒருவன் அடுவதும் தொலைவதும்
புதுவது அன்றிவ் வுலக இயற்கை"

என்று புறநானூறு கூறும்.

உணர்ச்சியுடைய எந்த உயிரினமும் போர்க்குணம் உடையதாகவே இருக்கும். ஆனால் உணர்ச்சியை அடக்கி அன்பும் அருளும் பெற்று வாழ விரும்புவது மனித இனம் ஒன்றே. இருப்பினும் உரிமை பறிபோகும் போதும், மானத்திற்கு இழிவு நேரும் போதும் தற்காப்புக்குச் சோதனை நிகழும் போதும் போரிடுவதைத் தவிர வேறு வழியே இல்லை. பழங்காலத்தில் அரசுக்குறிப்பை ஏற்றுக் கொண்டதாக இலக்கியங்கள் அனைத்தும் உரைக்கின்றன. அரசாங்கம் தனது குடிமக்களிடையே அமைதியை நிலைநாட்டவும், அயல் நாட்டார் செய்யும் வன்முறைகளை எதிர்த்து ஒடுக்கவும் போரில் ஈடுபட்டது. எனவேதான் ஓர் அரசுக்கு, அமைச்சு, நாடு. அரண், பொருள், படை, நட்பு - இவை ஆறும் அவசியம் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

"படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

போர் முறைகள்

பழந்தமிழர்கள் போரில் சில விதிமுறைகளைப் பின்பற்றினர் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை முதலியன. பிற நாடுகளை வென்று தனதாக்கிக் கொள்ளும் அரசன் மற்றொரு நாட்டின் மீது படை எடுக்கும்போது அவனைத் தடுத்து நிறுத்திச் செல்ல வேண்டும்.

"எஞ்சாமண்ணையினி வேந்தனை வேந்தன்
அஞ்சுகளத் தலை சென்று அடல் குறித்தன்றே"

இதுதான் வஞ்சி.

தும்பைக்கு இலக்கணம் தன் வலிமை ஒன்றினையே உலகில் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் படை எடுத்து வந்த எதிரி தன் நாட்டு எல்லையைக்கடக்கு முன்னே அவனை அழித்து வெல்ல வேண்டும். இதனைத்தான் தும்பை வலியுறுத்துகின்றது.

"மைந்து பொருளாக வந்த வேந்தனை
சென்று தலையளிக்கும் சிறப்பிற்று என்ப"

(வளரும்)

பழுதடைந்த இறைச்சி கிளிநொச்சியில் விற்பனை

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள சில இறைச்சிக் கடைகளில் பழுதடைந்த இறைச்சி விற்கப்படுவதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இவற்றைச் சமைத்து உண்ட சிலர் வாந்தியெடுத்ததாகவும், சிலருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது மின்சாரம் இன்றி குளிரூட்டிகள் செயற்படாததால் முதல் நாள் வெட்டிய இறைச்சி இவ்வாறு பழுதடைகின்றது; வீட்டிற்கு கொண்டுபோய் பார்த்தபோது அவற்றில் துர்நாற்றம் வீசுகிறது. 6ரூ

யாழ்மாவட்ட ஆஸ்பத்திரிகளில் 28 பரிசாரகர்கள் நியமனம்

யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் பரிசாரர்களின் (அற்றண்டன்) பற்றாக்குறையை நீக்குமுகமாக 28 பரிசாரகர்கள் கடந்த மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் இடம் பெற்ற பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பின்பு கடந்த வைகாசி 5ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே இந்த நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன. (13ரூ)

ஆசிரியர் சம்பளத்தைப் பணமாக வழங்க நடவடிக்கை

யாழ்.மாவட்ட ஆசிரியர்களிற்கு செப்டம்பர் மாத சம்பளம் வங்கிகள் ஆரம்பித்ததும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை ஆசிரியர்களின் சம்பளத்தைப் பணமாக அனுப்புமாறு யாழ். அரச அதிபர் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

அரச அதிபர் ஒரு தொகுதி ஆசிரியர்களின் சம்பளத்தைப் பணமாக வழங்குமிடத்து திருவுளச்சிட்டு மூலம் கோட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு சம்பளம் வழங்கப்படும் என யாழ் கல்விப்பணிப்பாளர் ஆர்.சுந்தரலிங்கம் தெரிவித்தார். ((70 கி)

மண்டைதீவில்...

லைப்பிட்டி, மண்கும்பான் திருநெல்வேலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்களை மீட்பதற்காக இவரது உறவினர்கள் சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் முறையிட்டுள்ளனர்.

இராணுவத்தினர் இப்பகுதியிலிருந்து உழவு இயந்திரம் மற்றும் லொறிகளையும் எடுத்துச்சென்று தமது நடவடிக்கைக்கு ஊர்காவற்றுறையில் பாவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலமானார்

திருமதி நடேசன் கங்காதேவி

(இலங்கை வங்கி, சுன்னாகம்)

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திருமதி நடேசன் கங்காதேவி (இலங்கை வங்கி, சுன்னாகம்) 1-10-90ல் காலமானார். இவர் நடேசனின் அன்பு மனைவியும், உதயசேகர், உதயகுமார் ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். கொல்லங்கலட்டி காலஞ்சென்ற வைத்தியலிங்கம், சரஸ்வதியின் அன்புமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று 1-10-90 திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் கொல்லங்கலட்டியில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொல்லங்கலட்டி, தகவல்;
தெல்லிப்பழை. சு.நடேசன்.

10017

திரு. சபாபதி சின்னையா

தனங்கிளப்பு வாசியும், கைதடி. நாவற்குழி சமாதி மடத்தின்சுவாமியாருமாகிய திரு சபாபதி சின்னையா அவர்கள் சிவபதமடைந்தார். இவர் திருமதி. பொன்னாச்சி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புக்கணவரும், திருநாவுக்கரசு, கனகசபாபதி, அருளானந்ததேவன், வளியம்மை (மகள்), சௌந்தரம் (மகள்), ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம்சென்ற சி. நா. செல்லத்துரை, செல்வராணி, பேபி, கனகரத்தினம், கமலேஸ்வரி, ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார். இவரின் இறுதிக்கிரியைகள் 01-10-1990 திங்கட்கிழமை மாலை மறவன்புலோ தனிப்பனை மயானத்தில் இடம் பெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தனங்கிளப்பு, தகவல்:
சாவகச்சேரி. சி.திருநாவுக்கரசு (மகன்)

10020

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்லியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 02 10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட

அரச ஆஸ்பத்திரிகளின் விபரம் சுகாதாரப் பகுதியால் சேகரிப்பு

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்திய சாலைகளில் தற்போதுள்ள ஊழியர்கள் விபரத்தையும், மருந்து வகைகளின் கையிருப்புப் பற்றிய விபரத்தையும் யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகம் திரட்டி வருகின்றது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று இப் பிராந்தியத்திலுள்ள சகல அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆனி 11 - ஆம் திகதிக்கு முன்பு கடமையாற்றிய ஊழியர்களின் விபரத்தையும், தற்போதுள்ள மேலதிக ஊழியர்களின் விபரத்தையும், மற்றும் வெளி நோயாளர்கள் தொகை, வார்ட்டுகளில்தங்கிச் சிகிச்சை பெறுவோர் தொகை, மருந்துகளின் கையிருப்பு நிலைவரம் ஆகியன பற்றித் தெரிவிக்குமாறு வைத்தியசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(13ரூ)

அகதிகளுக்கு உதவி

மாதகல்சென்.தோமஸ் பாடசாலையில் தங்கியுள்ள அகதிகளுக்கு மனித முன்னேற்ற நடு நிலையம் அரிசி,மா, சீனி பயறு ஆகிய உணவுப் பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளது. (13 ரூ)

நாளை...

செயலாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் 3 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சமூகம் தருமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது. 66ரூ

இரத்தவங்கி...

மக்கள் தாராள மனப்பாங்குடன் மானிப்பாய் இரத்த வங்கியில் இரத்த தானம் செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரத்த தானம் செய்ய விரும்புவோர் இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.(ப-11)

யாழ்...

பற்றி வருகிற வெள்ளிக் கிழமைக்கு முன்னர் கல்வித் திணைக்களத்திற்கு அறிவிக்கும்படி கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமாக்கப்பட்ட அல்லது அகதி முகாம்களாக இருக்கும் பாடசாலைகளில் கல்வி பயின்ற மாணவர்களிற்கு மாற்று ஏற்பாடாக அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவும் அத்துடன் போக்கு வரத்து சிர்குலைந்துள்ள இவ்வேளையில் தூர இடங்களிலுள்ள மாணவர்களிற்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்கவும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

கல்வி பயிலும் மாணவர்களுக்கான பாதுகாப்பிற்காக நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். கி

யாழ் தபாலகம்...

சட்டம் நீக்கப்பட்டுள்ளதால் தபால்சேவகர்கள் இடம்பெயராத பகுதிகளுக்கு நேரில் சென்று தபால்களை வழமைபோல் விநியோகிப்பார்கள்.

இடம்பெயர்ந்தவர்கள் தமக்குரிய கடிதங்களை வழமைபோல் தபாலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரை வேலைக்கு சமூகமளிக்காத தபால் உத்தியோகத்தர்கள்,தபால் சேவகர்கள் உடன் சமூகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (33கி)

ஊரடங்கு நேற்று முதல் நீக்கல் வலி வடக்கில் தொடர்ந்தும் அமுல்

யாழ் குடாநாட்டில் அமுலிலிருந்த ஊரடங்குச்சட்டம் நேற்றுக்காலை ஆறுமணி முதல் நீக்கப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி அறிவித்தது.

எனினும் வலிகாமம் வடக்கு உதவி அரச அதிபர் பிரிவில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

கடந்த 21-ம் திகதி காலை ஆறுமணிமுதல் யாழ் குடாவில் தொடர்ச்சியான ஊரடங்கு அமுலில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

வலி வடக்கு உதவி அரச அதிபர் பிரிவில் தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், மயிலிட்டி, தையிட்டி, ஊறணி, கட்டுவன், வறுத்தலைவிளான், பலாலி, வயாவிளான் ஆகிய பகுதிகள் உள்ளடங்குகின்றன. (கி)

பென்சன்...

வேண்டாம் என்று யாழ் செயலக ஓய்வூதியப்பிரிவு கணக்காளர் தெரித்துள்ளார் 66 ரூ

புங்குடுதீவு..

ஓடுசிதறிய நிலையிலும் உருக்குலைந்து காணப்பட்டது.

இந்த இளைஞர் நீலக் கோடு போட்ட யட்டியும், பெரிய பிறவுண் நிற கோடு போட்ட சேட்டும் அணிந்திருந்தார். சடலம் இப்பகுதி மக்களால் தகனம் செய்யப்பட்டது. 20-கி

தொடரும்

மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்தம்பி சிறிகாந்தன் (32) என்பவரே வலது காலை இழந்தவராவார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து பரந்தன் பகுதியில் மீண்டும் குடியேற மக்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

இத்தகைய வெடி விபத்துக்கள் பல ஏற்கனவே இப்பகுதியில் நிகழ்ந்து சிலர் உயிரிழந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ப-11-கி

வீரமரணம்...

குமார் துன்னாலை வடக்குக் கரவெட்டி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றன. 71ரூ

கோட்டையில்...

விபரம்: எஸ். ஏ. ஆர் (சிங்கப்பூர் தயாரிப்பு) துப்பாக்கி-1, எஸ் எம். ஜீ துப்பாக்கி - 2, ''கண்'' பவுடர் - 10 கிலோ கிராம், மிதி வெடிகள்-64, ரவைகள் - 1299, 60 மி. மீ மோட்டார் ஷெல் - 12, தலைக் கவசம் - 10. 71ரூ

திருமலை

துயரங்களையும் எடுத்துக் கூறிய இவ்வூழியர்கள் இவற்றை எண்ணினால் சரியான பாதுகாப்பற்ற நிலையில் எப்படி அங்கே போவது என்றும் பீதியடைந்தவர்களாகக்காணப்பட்டனர். 66 ரூ

காலமானார்

இராசா சின்னத்தங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை - முத்துத்தம்பி வித்யாசாலை)

வல்வெட்டி, ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலி ஆடியபாதம் வீதி, கேணியடியைச் சேர்ந்தவரும் ஆகிய இராசா சின்னத்தங்கம் 1-10-90 திங்கள் மாலை சிவபதமெய்தினார்.

இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய தலைமை ஆசிரியரும் சமாதான நீதிவானுமாய செல்லையா இராசா அவர்களின் அன்புமனைவியும், ராஜ்குமார் (இந்தியா), திருமதி ரஞ்சனா சுந்தரலிங்கம் (சங்கீத ஆசிரியை - முத்துத்தம்பி வித்யாசாலை), ராஜ்மோகன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத்தாயாரும், சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம், திருமதி சாருமதி ராஜ்குமார் (இந்தியா), திருமதி புஷபரஜனி ராஜ்மோகன் ஆகியோரின் அன்புமாமியாருமாவர்.

இவர் காலஞ்சென்ற வை. சபாரத்தினம்(மலேசியா), காலஞ்சென்ற வை. இராசலிங்கம்(மூதூர்), திரு. வை. துரையப்பா(பண்டத்தரிப்பு), திரு வை. துரைசாமி(இளைப்பாறிய ஆசிரியர் - புனிதபரியோவான் கல்லூரி), திருமதி அழகம்மா இராஜேந்திரன் (ஜப்பான்), டாக்டர் வை. ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரியும், சு. சிவஸ்ரீஸ்கந்தன், சு. செந்தூரன், சு. கானப்பிரியா, ரா. ரிஷிதமார், ரா. நிர்த்தயகுமார் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இல்லத்திலிருந்து அன்னாரின் பூதவுடல் திருநெல்வேலி செம்பாட்டு மயானத்திற்கு இறுதிக்கிரியைகளுக்காகஇன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கேணியடி, ஆடியபாதம் வீதி, சங்கீத பூஷணம்
திருநெல்வேலி. பொன். சுந்தரலிங்கம்

10021